## இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - 2014

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க

நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் (LKAS - 2) பிரகாரம் இருப்புக்கள் தேறிய நிகர பெறுமதி அல்லது கிரயம் ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் இருப்புக்களின் தேறிய நிகர பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 210,256,140 கிரயத்தில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த இருப்புக்களில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அசையாத ரூபா 18,052,749 ஆன இருப்பு மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 (LKAS - 8) இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிகளுக்குரிய வழுக்கள் அவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் பிரசுரிப்பதற்காக அங்கீகரிக்கப்படும் முதலாவது நிதிக்கூற்றுக்கள் தொகுதியில் வழுக்கள் இடம்பெற்ற காலப்பகுதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் திருத்தி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டின் மீள் வியாபார உடன்படிக்கையின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 14,455,280 தொகை மீளாய்வாண்டின் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 16 (LKAS – 16) இன் பிரகாரம், முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,530,748,888 கொள்விலையிலான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள எனினும் தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 369 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 (LKAS - 18) இன் பிரகாரம் சேவைகள் வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்பான வருமானங்களை இனங்காணும் போது, மீள் வியாபார

உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த ரூபா 46,566,500 தொகை மீளாய்வாண்டின் வருமானமொன்றாக இனங் காணப்பட்டிருந்த போதிலும், அக் கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்வதற்கு செலவிடப்பட்ட செலவினங்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS - 39) இன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் அரசாங்க செய்திப் பத்திரிகை கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,104,000 தொகை நியாமான பெறுமதியில் (Fair value) கணக்கிடப்பட்டு முதலீட்டுப் பெறுமதி குறைவடைந்தமை அல்லது அதிகரித்தமை என்பன இனங்காணப்பட்டு உரிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடொன்றில்லாமல் கொகாவில் ஒளிபரப்பு கோபுரத்திலிருந்து வசதிகளை வழங்கியமைக்காக ரூபவாஹினி நிறுவனமொன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,750,720 தொகையான பெறவேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச நிறுவனமொன்றின் விளம்பர நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த ரூபா 9,344,832 தொகைக்குரிய ஒளிபரப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், அத்தொகையினை மீளச் செலுத்த வேண்டிய பொறுப்பாக இருக்கையில் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்து அதற்காக ரூபா 658,500 தொகை முகவர் தரகொன்றாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

----------------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேவை பெறுநர் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 563,449,868 ஆக இருந்த போதிலும், அதனோடொத்த சேவை பெறுநர் கடன்பட்டோர் பட்டோலையின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 563,266,849 ஆக இருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலை என்பவற்றிற்கிடையே ரூபா 183,019 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(அ) ரூபா 132,125 ஆன நடைமுறை வேலை தொடர்பான விரிவான பட்டோலை

(ஆ) கெசட் மற்றும் டேப் (நூலகம்) /cassettes & tapes (library) மற்றும் recorded cassettes இருப்புக்கள் முறையே ரூபா 3,221,250 தொகை மற்றும் ரூபா 278,113 தொகையாக பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த இருப்புக்களின் பெறுமதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெறுமதியுடன் கூடிய இருப்பு மெய்மையாய்வு அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சேவை பெறுநர் கடன்பட்டோர் - ஒளிபரப்பு நேரம் கடன் விற்பனை**

(i) ரூபா 563,499,868 கூட்டுத்தொகையான சேவை பெறுநர் கடன்பட்டோரில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அழிவு நட்டம் ரூபா 71,041,991 தொகை அல்லது 13 சதவீதமாக இருந்தது. இந்நிலைமை நிறுவனத்தின் திரவத்தன்மை தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) சேவை பெறுநர் கடன்பட்டோருக்கு, கடன் வழங்கும் கொள்கையின் பிரகாரம் ஒரு மாத கால எல்லைக்குள் கடன் அறவிடப்பட வேண்டிய போதிலும், அக் கடன்பட்டோரிடமிருந்து ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் அளவு மொத்தக் கடன்பட்டோரில் 72 சதவீதம் அல்லது ரூபா 409,475,448 ஆகவும் 3 மாதங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு மொத்தக் கடன்பட்டோரில் 19 சதவீதம் அல்லது ரூபா 107,951,654 ஆக இருந்தன. மேலும் மொத்தக் கடன்பட்டோரில் மூன்று ஆண்டுகளுக்கும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவை பெறுநர் கடன்பட்டோர் மீதிகள் முறையே 10,554,683 தொகை ரூபா 66,250,180 தொகையாகவும் இருந்தன.

(iii) சேவை பெறுநர் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 53,886,160 தொகை அறவிட முடியாத மற்றும் காலப்பகுதிக்கு உரித்தாகாத கடன் மீதியாக இருந்ததுடன், சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்த கடன் அளவு ரூபா 24,405,255 ஆக இருந்தது.

(iv) சாதாரண வர்த்தக உடன்படிக்கைகளுக்காக பணத்தை அறவிடும் கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் உடன்படிக்கைக்குரிய சகல ஒளிபரப்பு நேரமும் வழங்கப்பட்டதன் பின்னர் விலைப்பட்டியல் வழங்கப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இக் கொள்கை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடனை அறவிடுவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நானாவித கடன்பட்டோர்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,858,971 தொகையை பெற்றுக்கொள்வதற்காக வரி மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) முற்பணம்**

கூட்டுத்தாபனத்தின் பதவிநிலை அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் குறித்த நிகழ்ச்சிகள் முடிவடைந்து 14 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 6,000,313 தொகையான முற்பணங்கள் 2015 யூன் 05 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1982 இன் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் | செயற்பாட்டுப் பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் நியமனம் வழங்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக மொத்தம் ரூபா 545,402 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | ஒழுக்காற்று பரிசோதனையின் பின்னர் சேவை முடிவுறுத்தப்பட்ட நபரொருவரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரமொன்று இல்லாமல் பணிப்பாளர் நாயகத்தினால் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பாளர் பதவியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் 06 மாத காலப்பகுதிக்காகச் ஆட்சேர்த்து அவருக்கு 2014 ஆகஸ்ட் முதல் 2015 பெப்ரவரி வரை ரூபா 246,665 கூட்டுத் தொகையான சம்பளம் மற்றும் உபகாரக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 71(1) | நிதியத்தின் தோற்றுவாய் எதுவாயிருப்பினும் புதிய படிகள் ஏற்படுத்தப்படும் போதும் மீளமைக்கும் போதும் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகளாக 188 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 21,532,320 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 105 முதல் 110 | | மீளாய்வாண்டின் போது 15 வாகனங்கள் 16 சந்தர்ப்பங்களில் விபத்திற்குள்ளாகி யிருந்ததுடன், இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 155 | | வழங்கப்பட்ட 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 156(3) மற்றும் நிதிப் பிரமாணம் 446(2) | | 1866 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 194,002,129 தொகையான கொடுக்கல் வாங்கல்களைப் காசேட்டில் பதிவுசெய்யும் போது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரின் கையொப்பம் இடப்படாமல் இருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 100,000 எல்லையை மிகைத்த ரூபா 179,873,550 ஆன 184 கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. |
| (v) | நிதிப் பிரமாணம் 156(6) | | கணக்குகள் தொடர்பான சகல கடித ஆவணங்கள், புத்தகங்கள், அறிக்கை குறிப்புக்கள், ஆவணங்கள் என்பவற்றை முறைப்படி அகற்றப்படும் வரை உரிய ஒழுங்குமுறையில் நல்ல நிலைமையிலும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் கொடுப்பனவு காசேட்டில் ஒரு நாளைக்குரிய பகுதியில் பதிவுகள் தெளிவற்ற வகையிலும் சேதப்படுத்திய வகையிலும் உத்தியோகத்தரொருவரால் பதிவுகள் வைக்கப்பட்டிருந்தன. |
| (vi) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பதவிநிலை அறிவித்தல் இலக்கம் 964(மேலதிக 04) | (i) | செயல் நிமிர்த்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்த உடனே மற்றும் குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் முடிவடைந்து 14 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 26 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா |

| | | |
|---|---|---|
| | | 1,737,750 தொகையான செயல் நிமிர்த்த உப கட்டுநிதிகளைத் தீர்வு செய்யும் போது குறித்த செயற்பாடுகள் நிறைவுபெற்று 03 நாட்கள் முதல் 75 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. |
| | | (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,375,250 ஆக இருந்ததுடன், அதில் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,033,250 தொகை 2015 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது. அம்முற்பணங்கள் வழங்கப்பட்டு 62 நாட்கள் முதல் 127 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| | | (iii) 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 158,250 கூட்டுப் பெறுமதியான முற்பணங்கள் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப் படாமல் 01 முதல் 60 நாட்கள் வரையான காலம் வைத்திருந்து தீர்க்கப்பட்டிருந்தது. |
| | (vii) நிதிப் பிரமாணம் 757(அ) மற்றும் (ஆ) | ரூபா 194,837,074 கிரயத்திலான பொறியியல் பிரிவில் காணப்பட்ட உதிரிப்பாக இருப்புக்கள் வருடாந்த இருப்பு மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 மார்ச் 28 ஆம் திகதிய நிதி அமைச்சு செயலாளரின் எம்எப்/ரீஆர்/1/2003 ஆம் இலக்கக் கடிதம் | செலுத்தக்கூடிய ஆகக் குறைந்த மாதாந்த வாடகையை மிகைத்து 04 வாடகை வாகனங்களுக்காக ரூபா 915,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கை |

| | |
|---|---|
| | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 8.3.5 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 02 உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்டிருந்த எரிபொருள் அளவு ரூபா 514,880 ஆக இருந்தது. |
| (ஏ) 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க மற்றும் 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 13 உத்தியோகத்தர்களுக்கு வாகனம் மற்றும் எரிபொருள் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 7,222,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008/(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மாதத்திற்கு உரித்துடைய எரிபொருள் லீட்டர் அளவை மிகைத்து ஐந்து உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட எரிபொருள் அளவின் பெறுமதி ரூபா 1,194,390 ஆக இருந்தன. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது அவசர தேவைப்பாடொன்றாக குறிப்பிடப்பட்டு கொள்வனவுச் செயன்முறையிலிருந்து விலகி நிதி, திட்டமிடல் அமைச்சின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற அமைச்சரவை வழங்கியிருந்த கட்டளையையும் கருத்திற்கொள்ளாமல் எழுத்துமூல உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் தேசிய ரூபவாஹினி செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக வெளிநாடுகளில் ஒளிபரப்புவதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 3,454,279 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 182,480,765 ஆக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் 47,868,447 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 230,349,212 அல்லது 481 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டைவிட 8 சதவீதத்தால் குறைவடைந்ததமை மற்றும் செலவினம் 3 சதவீதத்தால் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 182,480,765 ஆக இருந்த போதிலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மூலதன நுழைவு பின்பற்றப்பட்டமையால் வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட ரூபா 15,903,664 அளவு மற்றும் உரிமைக் கூற்றில் சீராக்கப்பட்ட ரூபா 14,455,280 தொகையான முன்னைய ஆண்டின் மீள் வியாபார செலவினம் சீராக்கப்பட்டதன் பின்னர் நட்டம் ரூபா 212,839,709 வரை அதாவது 17 சதவீதத்தால் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கு ஒத்த முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் காரணமாக முன்னைய ஆண்டில் ரூபா 47,869,000 ஆன இலாபம் ரூபா 22,965,000 வரை குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது

### 3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளிதரப்பினரால் 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனப் பதவியணியினரால் 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவ் வழக்குகளுக்காக மீளாய்வாண்டினுள் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 1,151,320 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வெளித்தரப்பினரால் தொடரப்பட்ட 06 வழக்குகளுக்குரிய முறைப்பாட்டு தரப்பினனரால் கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 1,270,000,000 தொகையாக இருந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் வெளிநபர்களுக்கு எதிராக 27 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் 05 வழக்குகளிலிருந்து ரூபா 1,340,735 தொகை கிடைத்திருந்தன. ஒரு வழக்கு காலாவதியாதல் சட்டத்திற்கு உட்பட்டமையால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய 21 வழக்குகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 16,904,142 ஆக இருந்தது. இவ்வழக்குகளுக்காக மீளாய்வாண்டினுள் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 766,490 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**
---------------------------------------------------------------------

முறையான தொழிற்படு மூலதன முகாமைத்துவ பொறிமுறைமையொன்றை நடைமுறைப்படுத்தாமை மற்றும் கடன் அறவீடு செயற்திறனின்மை போன்ற காரணங்களால் வங்கி மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ள கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த மேலதிகப்பற்று வட்டி ரூபா 8,385,155 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் காசேட்டின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று ரூபா 135,658,642 ஆக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**
-----------------------------------

**4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**
-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏனைய ஊடக நிறுவகங்களுடன் பரஸ்பர விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அந்த ஊடக நிறுவனங்களுடன் கூட்டுத்தாபனம் மீள் வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தியிருந்தது. இந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் எழுத்து மூல உடன்படிக்கைகளை மேற்கொள்ளாமல் பத்திரிகை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ஒளிபரப்புக் காலத்தின் பெறுமதி ரூபா 68,366,257 ஆக இருந்ததுடன், அது தொடர்பில் ரூபா 44,128,126 தொகைக்கு பத்திரிகை விளம்பரம் பிரிசுரிக்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட ஒளிபரப்புக் காலத்தின் பெறுமதிக்கு சமமாக கூட்டுத்தாபனத்திற்கு சாதகமான வகையில் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படாமையால் மீள் வர்த்தக உடன்படிக்கையூடாக சேவைகளைப்

பெற்றுக்கொள்ளல் மிகவும் இலாபகரமாகவும் வினைத்திறனான முறையிலும் முகாமை செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கூட்டுத்தாபனத்தினால் பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்குரிய பத்திரிகை நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் சரியான தன்மையைப் பரீட்சிக்க கூடிய வகையில் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் மீள் வர்த்தக உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 46,566,500 தொகையான செலவினங்களின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(iii) கூட்டுத்தாபனம் மேற்கொள்ளப்பட்டிருந்த மீள் வர்த்தக உடன்படிக்கையினது மாதாந்த கணக்கு அறிக்கை இரண்டு தரப்பினராலும் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் 04 பத்திரிகை நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டிற்குரிய 9 மாத கணக்கு அறிக்கைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1985 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளின் போது லங்கா புவத் நிறுவனத்தில் ரூபா 1,104,000 முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எதுவித பங்கிலாப வருமானமும் கிடைக்கப்பெற்றிராததுடன் அம் முதலீடு தொடர்ந்தும் அவ்வாறே பேணப்பட்டு வரப்பட்டிருந்தது.

(இ) வெளித்தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம்/ நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கான தடவைகளின் எண்ணிக்கை எஞ்சியிருந்த போதும் உடன்படிக்கை காலத்தின் போது குறித்த தடவைகளை ஒளிபரப்பாமையால் மீளாய்வாண்டினுள் செலவினமாக 19 தொலைக்காட்சி நாடகம்/ நிகழ்ச்சிகளுக்குரிய ரூபா 50,531,902 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் ரூபா 33,200,909 தொகையான வெவ்வேறு கடன்பட்டோரின் இழப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,622,566 ஆக அல்லது 56 சதவீதமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் கூட்டுத்தாபனத்தின் கடன் அறவீடு தொடர்பான கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அம் மீதியில் 1-9 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து வரும் கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 146,863 தொகையும் 5 - 7 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ஓய்வுபெற்ற /

சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 111,684 தொகையும் வெளிநாட்டு ரூபவாஹினி நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 542,554 தொகையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,858,971 தொகையும் மருத்துவ பட்டியல் மீள்நிரப்பும் போது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 558,602 ஆன மீதியும் உள்ளடங்கியிருந்தன.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சாத்தியவள ஆய்வின்றி 2009 ஆம் ஆண்டில் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்ட National Television (NTV) அலைவரிசைக்காக மீளாய்வாண்டில் ரூபா 5,743,015 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் எதுவித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 18 உத்தியோகத்தர்களால் நூலகத்திலிருந்து எடுத்துச் சென்று மீள ஒப்படைக்கப்படாத ஒலி நாடாக்களின் எண்ணிக்கை 723 ஆக இருந்ததுடன், அதில் 412 ஒலி நாடாக்கள் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் நூலகத்திலிருந்து வழங்கப்பட்டதாகும்.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) கூட்டுத்தாபனத்தினால் சனாதிபதி தேர்தலின் போது ஒரு சனாதிபதி வேட்பாளருக்காக ரூபா 34,719,750 பெறுமதியான ஒளிபரப்புக் காலம் இலவசமாக வழங்கப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி வேட்பாளர் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட ஒளிபரப்புக் காலத்தின் 60 சதவீதமாக இருந்தது. அவ்வாறே இந்த வேட்பாளருக்கு அரச நிறுவனமொன்றின் அனுசரணையின் கீழ் ரூபா 3,286,750 ஆன ஒளிபரப்புக் காலம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களுக்காக இந்த வேட்பாளருக்கு மாத்திரம் 50 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 9,088,000 ஆக இருந்தது.

(ii) அவ்வாறே சனாதிபதி தேர்தலுக்குரித்தாக ரூபா 5,202,750 தொகையான அறிவித்தல்களை விளம்பரம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன், அதில் ரூபா 1,000,000 தொகை அறிவித்தல்களுக்காக பணம் கிடைக்கப்பெற்றிருந்தும் ஒளிபரப்புக் காலத்தை வழங்காத காரணத்தால் அப்பணத்தை மீளச் செலுத்த வேண்டியேற்பட்டது.

(ஆ) நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் உடன்படிக்கைகளை மேற்கொள்ளாமல் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளாக பட்டியல்படுத்தப்பட்டிருந்த ரூபா 2,146,650 பெறுமதியான 2,602 செக்கன்களான ஒளிபரப்பு நேரம் சனாதிபதி வேட்பாளரின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு செயற்பாடுகள் பின்பற்றாமல் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்படாத பெயரளவிலான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக ரூபா 990,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அச்செலவினங்களுக்குரிய பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு பாதகமான நிபந்தனைகளுடன் உடன்படிக்கை அடிப்படையில் எதிர்கால தொழில்நுட்ப மாற்றத்திற்கு பொருந்தாத பயன்படுத்தப்பட்டுள்ள 2 கோபுரங்கள் ரூபா 16,928,653 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாத உள்ளக வீதிகளை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தத்திற்காக போட்டி விலை கோரலின்றி ரூபா 5,617,377 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 116,171 தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், மேல் மாகாண பெருந்தெருக்கள் நிர்மாணங்களுக்குரிய நியம விலை விபரங்களை விட 60 சதவீதமான கூடிய விலைக்கு அதாவது ரூபா 1,882,440 ஆன கூடிய பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

**4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்த 06 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டினுள் சம்பளமும் படிகளாகவும், மேலதிக நேரப் படிகளாவும் முறையே ரூபா 3,073,361 தொகையும் ரூபா 1,406,360 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவினங்கள் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபவாஹினி பயிற்சி நிறுவகத்தின் தலைவரின் கடமைக்காக விடுவிக்கப்பட்டிருந்த வாடகை வாகனமொன்றுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 188,140 தொகையான செலவினத்தை மீள் நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 2 வேன் வண்டிகள், ஊடக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின் போது சனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான வேன் வண்டியொன்றும் ஜீப் வண்டியொன்றும் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் சனாதிபதி ஊடகப் பிரிவிற்கு 06 ஊடக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 03 உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,823,079 ஆக இருந்தது.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபவாஹினி கட்புல செவிப்புல நூலக நடவடிக்கைகள் முறையாகவும் செயற்திறனுடனும் இயங்கச் செய்வதற்காக அதன் நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தும் நோக்கில் ரூபா 1,734,000 செலவு செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டில் தன்னியக்க பட்டை குறியீட்டு முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இம்முறைமையின் சில பகுதிகளும் இலத்திரனியல் ஒளிப்பேழைப் பாதுகாப்பு முறைமையும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், இதுவரையில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறியியல் பிரிவில் ரூபா 18,052,749 இற்கான உதிரிப்பாகங்கள் அசைவற்ற கையிருப்பாக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டதுடன், வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

செய்திப் பிரிவின் நிர்மாண வேலை நடவடிக்கைகளுக்கு 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் உசாத்துணைக் கட்டணம் மற்றும் மண் மாதிரிகளைப் பரிசீலிப்பதற்காக ரூபா 183,051 செலவிடப்பட்ட போதிலும், குறித்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.8 பதவியணியினர் நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 985 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான பதவியணி 996 ஆக இருந்தது. HM மற்றும் MM தொகுதிக்குரிய பதவிகளில் பதவியணியினரில் 32 பேருக்கான மிகையொன்று அவதானிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத அமைய / தற்காலிக அடிப்படையில் 63 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 4.9 வாகனப் பாவனை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 16 வாகன விபத்துக்களில் 5 இற்காக ரூபா 695,604 தொகை திருத்தச் செலவினமாக செலவிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 669,620 தொகை மாத்திரம் காப்புறுதி நட்டஈடாக கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும் 11 சந்தர்ப்பங்களில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான போக்குவரத்து பிரிவில் 47 வாகனங்களும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை 17 ஆகவும் இருந்தன. உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபன வாகனங்களில் 1,004,908 கி.மீற்றர்களும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு வாகனங்களில் 576,115 கி.மீற்றர்களுமாக பயணித்திருந்த முழுத் தூரம் 1,581,023 கிலோ மீற்றர்களாக இருந்தன. மீளாய்வாண்டின் எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினமாக முறையே

ரூபா 22,158,873 தொகையும் ரூபா 8,521,794 ஆக இருந்தமையால் ஒரு கிலோமீற்றருக்கு செலவிடப்பட்ட எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 19.41 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்காக ரூபா 23,135,387 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆண்டினுள் 05 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் இருந்ததுடன், எரிபொருள் இல்லாமல் சாரதியொருவருக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று கணக்காய்வு திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதன பாதீட்டின் மூலம் ஒலியறைக்கூடம் மற்றும் வெளியக ஒளிபரப்பு வசதிகள் புனரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்காக ரூபா 206 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இப்பரிவிற்குரிய ஒரு செயற்திட்டமேனும் ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன், ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 12 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்கள் குறித்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் பிரதான கட்டுப்பாட்டு அறைக்காக ஆண்டில் நிறைவு செய்யப்பட வேண்டிய 07 மூலதனச் செயற்திட்டங்களுக்காக ரூபா 89 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 55 மில்லியன் பெறுமதியான 04 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்பிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதமான அளவில் காணப்பட்டதுடன், ஏனைய இரண்டு செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 10 சதவீதமாக இருந்தன. அவ்வாறே ரூபா 34 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தற்போது காணப்படும் ஒளிபரப்பு வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் மூலதன பாதீட்டில் 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 54 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு செயற்திட்டம் மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் 02 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29 மில்லியனான செயற்திட்டமொன்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 20 சதவீதமாக இருந்தது.

(உ) ரூபவாஹினி கட்டிட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் மூலதன பாதீட்டின் மூலம் News Studio and Server Room நிர்மாணிப்பதற்காக ரூபா 60 மில்லியன் ஆன 02 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறித்த ஆண்டின் போது இச்செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் தகவல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 8 மில்லியன் தொகை 02 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், மற்றைய செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதின் பௌதீக செயன்முன்னேற்றம் 20 சதவீதமாக இருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தில் நிரந்தர கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் முதல் அரையாண்டின் போது 18 கணக்காய்வு ஐயவினாக்களும் அறிக்கைகளும் இரண்டாவது அரையாண்டில் 18 கணக்காய்வு ஐய வினாக்களும் அறிக்கைகளும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், ஐய வினாக்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினத்திற்கிடையே கவனத்திற்கு கொள்ள வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர்

(ஆ) பாதீடு

(இ) கணக்கீடு

(ஈ) ஊழியர் கடன்

(உ) முற்பணம் வழங்கல்

(ஊ) மீள் வர்த்தக உடன்படிக்கைகள்

(எ) ஒளிபரப்பு நேர விற்பனை வருமானச் சேகரிப்பு

(ஏ) ஊழியர் முகாமைத்துவம்

(ஐ) கடன் அறவீடு